RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt2238

OPEN ACCESS

# ஐங்குறுநூற்றில் தாயின் பாத்திர பண்புகள்

**இரா. சுகுந்தலெட்சுமி** [அ, *]

[அ] தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்- 608002, தமிழ்நாடு, இந்தியா

# Character Traits of the Mother in Ainkurunooru

**R. Sugunthalakshmi** [a, *]

[a] Department of Tamil Studies and Research, Annamalai University, Chidambaram-608002, Tamil Nadu, India

* Corresponding Author: lakshmisuguntha@gmail.com

Received: 21-08-2022
Revised: 30-10-2022
Accepted: 03-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The literature of the Sangam period is structured in such a way that it depicts the lifestyles and activities of the people, or all literature is set up in such a way. As an example, this research paper describes the motherhood of two mothers: one, the birth mother, and the other, the foster mother. It portrays their motherhood. A woman who grows up under the care of a foster mother falls in love with a man she meets due to her age, puberty, or the evolution of chastity. She is secretly developing it without the knowledge of her two mothers. In the final state of the love affair, with the consent of the foster mother, she elopes with her man. The foster mother told this to the birth mother and said, "What her daughter has done is not wrong. She calms down the birth mother by saying that it happened at the instigation of her daughter's lover only. The aim of this article is to show that the daughter of the birth mother, who was disheartened or heartbroken at the thought of her daughter's behaviour without following social restrictions such as nurturing secret love and chastity, accepted her daughter and her man generously with mother's heart.

**Keywords:** Ainkurunooru, Mother, Daughter, Chastity

## முன்னுரை

சங்க கால இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறைகளையும் செயல்களையும் படம்பிடித்துக் காட்டும் வண்ணமாக அமைக்கப்பட்டுள்ளது (அ) அனைத்து இலக்கியங்களும் அமைந்துள்ளது. அதிலொன்று உதாரணமாக இந்த ஆய்வுக்கட்டுரை தாயுள்ளம் கொண்ட இரு தாய்மார்கள் ஒருவள் (பெற்றதாய்) நற்றாய், மற்றொருவள் (வளர்ப்புத்தாய்) செவிலித்தாய், இவர்களின் தாய்யுள்ளத்தை விவரிக்கிறது. செவிலித்தாயின் கண்காணிப்பில் வளரும் தலைவி ஒருவள் தன் வயதின் மூப்பின் காரணமாக (அ) தான் பருவமடைந்தலின் காரணமாக (அ) கற்பு வாழ்க்கையின் பரிணாமமாக தான் கண்ட தலைவனோடு காதல் வயப்படுகின்றாள். இது தன் இரு தாய்களுக்கும் தெரியாமல் இரகசியமாக வளர்த்து வருகின்றாள்.

காதலின் இறுதி நிலையில் செவிலித்தாயின் சம்மதத்தோடு தலைவனோடு உடன்போக்கு மேற்கொள்கிறாள். இதை செவிலித்தாய் நற்றாயிடம் கூறி, தன் மகள் செய்தது தவறில்லை. தலைவன் தூண்டுதலால் நடந்தது என நயம்பட பேசி நற்றாயை சமாதானம் செய்கிறாள். நற்றாயோ மகள் சமூக கட்டுப்பாடுகளான களவு, கற்பு வாழ்க்கையை முறையாக மேற்கொள்ளாமல் மகள் உடன் போக்கை எண்ணி மனமுடைந்து (அ) மனிதம் உறுகுலைந்து இருந்தவள் தாயுள்ளத்தோடு தன் மகளையும் அவளின் தலைவனையும் பெருந்தன்மையாக ஏற்றுக்கொள்ளும் தாயுள்ளத்தை எடுத்துக்கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தாய்

சங்க கால இலக்கியங்களில் கூறப்படும் தாய்மார்கள் நற்றாயும், செவிலித்தாயும் ஆவாள். இவர்கள் இருவரும் ஒருங்கிணைந்த தோழியாக மட்டுமல்லாமல், ஒரே வயிற்றில் பிறப்பெடுத்த சகோதரிகளாகவும் இலக்கியத்தில் பேசப்படுகின்றன. மேலும், நற்றாய் தலைவியைப் பெற்றத்தாய், அவள் மண்ணில் பிறந்ததிலிருந்து இல்லற வாழ்க்கைக்கு போகும் வரை தலைவியை வளர்த்தவள் செவிலித்தாய் ஆவாள். இருப்பினும், நற்றாயிக்கும், செவிலிக்கும் அவள் மீது உள்ள பாசமும், அன்பும் மிகுதியாகவே இருக்கும். இது தாய்மைக்கு இலக்கணமாக காட்டுகிறார் தொல்காப்பியர். "தாய்" என்ற ஒரு சொல்லைப் பொதுவாகக் கொண்டு நற்றாயையும், செவிலித்தாயையும் குறிப்பிட்டுள்ளார்.

"தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும்"

என்ற நூற்பாவில் "தாய்" என்பது செவிலித்தாயைக் குறிக்க வந்தது என்பதை உரையாசிரியர்களின் வழி அறியமுடிகிறது (Ilampuranar, 2005). செவிலித்தாய் தலைவிக்கு நெருக்கமாய் இருந்து முதன்மை பெறுதலை நச்சினார்க்கினியர், "நற்றாய் இல்லறம் நிகழ்த்தும் கருத்து வேறு உடைமையின் உற்று நோக்காள், செவிலியே தலைவியை உற்றுநோக்கி ஒழுகுவாள்" என விளக்குகிறார். இலக்கணங்கள் கூறும் நற்றாய்-செவிலி ஆகிய இருவரும் தலைவியின் காதல் வாழ்க்கையில் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுகின்றனர்.

நற்றாய் தலைவியைப் பெற்றவள், செவிலி வளர்த்தவள். இலக்கியங்களைப் பொறுத்தவரை இவ்விருவருக்கும் வேறுபாடு காண்பது அரிதாகவே உள்ளது. தொல்காப்பியர் செவிலியைப் பற்றிக் குறிக்கும்போது,

"ஆய்பெருஞ்சிறப்பின் அருமறை கிளத்தலின்

தாயெனப் படுவோள் செவிலி யாகும்"

என்கிறார் (Ilampuranar, 2005).

செவிலித்தாயின் இயல்பு

செவிலி என்பவள் தலைவியின் வளர்ப்புத் தாயாவாள். தலைவி பிறந்தநாள் தொட்டு அவளைச் சிறப்பாகப் போற்றி வளர்த்து வருபவளும், தலைவியின் தோழியை ஈன்ற தாயுமாவாள். தலைவியொடு தோழி எத்தகைய நட்பும் நெருக்கமும் உடையவளாக விளங்குகிறாளோ அத்தகைய நட்பும் நெருக்கமும் உடையவளாக நற்றாயொடு செவிலி விளங்குகின்றாள் என்பதை,

"வித்திய வெண்முளை களவன் அறுக்கும்

கழனி ஊரன் மார்உற மரிஇ

திதலை அல்குல் நின்மகள்

பசலை கொள்வது எவன்கொல்? அன்னாய்"

எனும் பாடலின் மூலம் தலைவனைத் தலைவிக்கு மணமுடிக்க வேண்டித் தோழி செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்கின்றாள் (Dhatchanamoorthi, 2004). தலைவியின் காதல், சமூகக்கட்டுப்பாடு, நற்றாய் தந்தையரின் எதிர்பார்ப்பு ஆகிய நிலைகளை இணைக்கும் பாலமாகச் செவிலி விளங்குவதைக் காணமுடிகிறது.

## களவில் தாய்

களவின் காரணமாகத் தலைவியின் உடலில் தோன்றும் மாற்றங்களுக்கான காரணத்தை ஆராயும் போது தாய் மகளிடம் நேரடியாக எதுவும் கேட்பதில்லை. தோழியிடமே வினவுவாள். ஊரில் அலர் எழுந்த காலத்தில் தலைவியின் களவொழுக்கத்தைத் தாய் குறிப்பாக அறிந்துக் கொள்வாள். மகளை இற்செறிப்பாள், கடுமையான காவலுக்கு உட்படுத்துவாள் என்பதை,

"கறிவளார் சிலம்பிற் கடவுட் பேணி

அறியா வேலன் வெறியெனக் கூறும்

அதுமனம் கொள்குவை அனையிவள்

புதுமலர் மழைக்கண், புலம்பிய நோய்க்கே"

என்ற பாடலில் களவு, கற்பு என இரு திறத்திலும் தலைவியிடம் அன்பு கொண்டவளாய்ப் படைக்கப்படுபவள் செவிலி. தலைவியின் களவு வாழ்வை ஊரார் அலராகத் தூற்றுவதிலிருந்து உடன்போக்கு மற்றும் தலைவன் தலைவியரிடையே குடிமைச் சிறப்பை ஆய்வது வரை களவில் செவிலி கொள்ளும் வாய்ப்பு பெரிது. தலைமக்கள் சிறந்து விளங்கும்படி முக்காலத்தையும் ஆய்ந்து நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும் கற்பின் திறத்தே செவிலியின் பணியாகும் (Dhatchanamoorthi, 2004).

மேலும்,

"அறியா தயர்ந்த அனைக்கு வெறியென

வேலன் உரைக்கும் என்ப"

எனும் இப்பாடலிலும் செவிலியின் தன்மையை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது (Somasundharanar, 2009).

தலைவி தலைவனுடன் மேற்கொள்ளும் உடன்போக்கில் அவளைத் தேடிப் பின் செல்லும் உரிமை பெற்றவள் செவிலியே ஆவாள். மகட்போக்கிய தாய் கூற்றுப் பாடல்கள் செவிலியையே பெரிதும் குறிப்பதால் தலைவியைத் தன் மகளாய்ப் பேணிய தன்மை செவிலி இடத்தில் உள்ளதை உணரமுடிகிறது. மேலும்,

"காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்"

என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்துகின்றது. தம்மகள் கனவில் புலம்புவதைக் கேட்டத் தாய் தலைவியின் களவு வாழ்க்கை பற்றிய உண்மைகளைத் தோழியின் வாயிலாகத் தெரிந்து கொள்கின்றாள் (Ilampuranar, 2005). தன் மகளுடன் தொடர்பு கொண்ட தலைமகனின் பண்புகளை நன்கு அறிந்தவர்களின் வழி அறிந்த தாய், பெரிதும் மகிழ்ந்து அத்தலைவனுக்கே தன் மகளை மணம் முடிக்கத் தெய்வத்தை வாழ்த்துகின்றாள்.

## தாயின் புலம்பலும் மன ஆறுதலும்

உடன்போக்குப் பாடல்கள் தலைவியின் கற்புத் தன்மையையும், தாயின் அன்பு மென்மையையும், அவற்றில் பிறந்த சினத்தின் தன்மையையும் காட்டுகின்றன. தாயின் சினம் தலைவன் மேலும், தலைவனின் தாய் மேலும் பாய்கின்றது. பிறந்த நாள் முதல் தன் மகளின் அன்பை ஒருநாள் காதலில் மாற்றிவிட்டானே என்று தாய் துடிக்கின்றாள். தன் மகள் உடன்போக்கு மேற்கொண்டமை அறச்செயல்தான் என்று தாய் உணர்ந்தாலும், தலைவியின் பிரிவைத் தாங்க முடியாதவளாகிறாள். அதற்குக் காரணம் தலைவன் தானே என்ற சினம் எழுகிறது. அன்பு காரணமாக, தன் மகளைத் திட்டமுடியாத தாயுள்ளம் தலைவனைத் தூற்றுகிறது. அருஞ்சுர வழியில் தன் மென்மையான மகளை நடக்கச் செய்கிறாளே என்று தாயுள்ளம் துடி துடிக்கிறது. அதனால் தலைவனை ஏதிலாளன், அறனிலாளன், நொதுமலாளன், வன்கண்காளை என்று சபிக்கின்றாள் என்பதை,

"நினைத் தொறும் கலிழும் இடும்பை எய்துக

புலிக்கோட் பிழைத்த கவைக் கோட்டு முதுகலை

மான்பிணை அணைதர ஆண்குரல் விளிக்கும்

வெஞ்சுரம் என்மகள் உய்த்த

அன்புஅமை வவ்வில் விடலை தாயே”

என்னும் பாடலில் தலைவனுடையத் தாயும் மகனைப் பிரிந்து வாட வேண்டும் என்று சபிக்கிறது தாயுள்ளம். வெவ்விய பாலை நெறியின்கண் தன் மகளைச் செலுத்திய தீவினையைச் செய்த தலைவனின் தாய் நினைக்குந்தோறும் கண் கலங்கி அழுதற்குரிய பெருந்துயரத்தை என்போன்று அடைவாளாக என்கிறாள் (Somasundharanar, 2009). என் மகளுக்கு எங்களைப் பிரிந்து உடன்போக்கு செல்லத் துணிவு வராது. அத்துணிவைத் தந்தவன் தலைவனே என்று கூறுகின்றான் என்பதை,

“காய்ந்து செலற் கனலி கல் பகத் தறுதலின்

ஈந்து குருகு உருகும் என்றூழ் நள்இடை

உளிமுக வெம் பரல் அடி வருத்துறாலின்

விளிமுறை அறியா வேய் கரி கானம்

வயக் களிற்று அன்ன காளையொடு என் மகள்”

என்றப் பாடலில் தந்தையின் காவல் மிகுந்த நகரைக் கடந்து தன் மகளை அழைத்துச் சென்ற தலைவனின் வீரம் பாராட்டப்படுகிறது (Parimanam, Balasubramaniyan, 2004).

மேலும்,

“பெருவிதுப்பு உறுக மாதோ எம்மில்

பொம்மல் ஓதியைத் தன்மொழிக் கொளீஇக்

கொண்டுடன் போக வலித்தவன்கண் காளையை ஈன்ற தாயே!”

எனும் நற்றிணைப் பாடலிலும், முன்பு கூறப்பட்ட செய்தி பொருந்துவனவாகும் (Balasubramanian, 2007).

## செவிலி இல்லற மாண்பு காணல்

கற்புக் காலத்தில் தலைவியின் இல்லத்திற்குச் செல்கிறாள் செவிலி. அங்கு தலைவனும், தலைவியும் உடலும் உயிரும் போல ஈருடல் ஓருயிருமாக வாழ்கின்றனர். தன் மகள் தனக்கொரு மகனைப் பெற்று இல்லறம் இனிதாக நடத்தி வருதலைத் தன் கண்ணாரக் கண்டு மகிழ்ச்சி அடைகிறாள். செவிலித்தாய் தான் விரும்பியவாறே சென்று சில நாட்கள் மகளோடு இருந்து மகள் குடும்பம் நடத்தும் பாங்கினை உடனிருந்து கண்டு மகிழ்ச்சியடைகின்றாள். பின்னர் தன் மகளை விட்டுப் பிரிய மனதில்லாமல் மீண்டும் தன் இல்லத்திற்கே வருகின்றாள். வந்து தலைவியைப் பெற்றத் தாய் நற்றாயிடம் தலைவி குடும்பம் நடத்தும் பாங்கினைக் கூறி மகிழ்விப்பாள் என்பதனை,

“மறியிடைப்படுத்த மான்பிணைபோல

புதல்வன் நடுவணன் ஆக நன்றும்

இனிது மன்றவர் கிடக்கை முனிவு இன்றி

நீல் நிற வியலகம் கவை இய

ஈனும் உடம்பரும் பெறலருங் குரைத்தே”

என்றப் பாடலில், தன் குட்டியை இடையில் கிடத்திவிட்டு இருமருங்கு கிடக்கும் கலைமானும், பிணை மானும் போல, தம் மகன் தமக்கிடை நிலத்தே கிடக்க அந்த நம்பியும் நம் மகளும் இருமருங்கும் இனிது துயில் கொண்டு இருந்த காட்சி காண்பதற்கு மிக இனியதாக இருந்தது என்று செவிலித்தாய் கூறுவதன் மூலம் இருவரின் காதல் மிகுதியை அறியமுடிகிறது (Somasundharanar, 2009).

மேலும் ஐங்குறுநூற்றில்,

"மாலை முன்றில் குறுங்காற் கட்டில்
மனையோள் துணைவி ஆக புதல்வன்
மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பப்
பொழுதிற்கு ஒத்தன்று மன்னே
மென்பிணித்து அம்ம பாணனது யாழே"

என்ற பாடலில், இசைவாணன் ஆகிய பாணன் தன் யாழினை வருடி எழுப்பிய இன்னிசை ஏனைய பொழுதுகளில் இன்பம் தருவதாயினும் தலைவன் தன் இல்லத்தில் நிலா முற்றத்தில் இடப்பட்ட கட்டிலில் தனது துணைவியுடன் தன் புதல்வனை மார்பில் தவழ வீற்றிருக்கும் இவ்வேளையில் அந்த யாழிசை மகனோடு இன்புற்று இருக்கையில் யாழிசை மெல்லிய வருத்தத்தை தருகிறது என்கிறாள் செவிலி (Somasundharanar, 2009).

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் மக்கள் வாழ்க்கைமுறையை தனக்கேற்றார் போல் வாழ்ந்துள்ளனர். களவில் தொடங்கி கற்பில் இணையும் வரை தாய்மார்களது உடல் உயிரை அவர்களுடைய பிள்ளைகள் வருத்தெடுக்கும் அளவிற்கு உள்ளாக்குகின்றன. காதல் வாழ்வில் தலைவியை இல்லத்தில் செறித்து வைத்து, இல்லற வாழ்க்கையில், அவளது அன்பு மிகுதியால் வளர்ப்புத் தாயான செவிலி, அவள் மனை சென்றும், மகிழ்ந்து வருவது தாய்மார்களின் தலையாய கடமையாக மட்டுமல்லாமல் சமுதாய நடைமுறையாகவும், இலக்கிய வரலாறாகவும் அமைந்துள்ளன என்பதை அறிந்து செவிலி மற்றும் நற்றாய் தன் மகளின் மீதுள்ள பாசப்பிணைப்பை ஆராயப்பட்டுள்ளன.

## References


Balasubramanian, K.V. (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Dhatchanamoorthi, A. (2004) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Parimanam, A.M., Balasubramaniyan K, V. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Somasundharanar, P. V. (2009) Ainkurunuru Mulamum Uraiyum, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License